
## தலைநகரில் தீபாவளிச் சந்தை:

# வாடகை உயர்வு இல்லை



கோப்புப்படம்

### கூட்டரசுப் பிரதேச அமைச்சு உறுதி

கோலாலம்பூர், அக். 5-

தலைநகரைச் சுற்றி நடத்தப்படும் தீபாவளிச் சந்தைக்கான வாடகைக் கட்டணத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் உயர்த்தப் போவதாக மைபிபிபி கட்சி சுமத்தி வரும் குற்றச்சாட்டை கூட்டரசுப் பிரதேசத்துறை அமைச்சு நேற்று மறுத்தது.

அதேவேளையில், தீபாவளிச் சந்தைக்கான கால கட்டத்தையும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் குறைக்காது என கூட்டரசுப் பிரதேச அமைச்சரின் சிறப்பு அதிகாரி ஜி. சிவமலர் கூறினார்.

பக்கம் 13

### முதல் பக்கத் தொடர்ச்சி

## தலைநகரில் தீபாவளி...

மைபிபிபி கட்சி சுமத்தியுள்ள குற்றச்சாட்டில் சிறிதும் உண்மையில்லை. கடந்த ஆண்டுகளைப்போலவே இவ்வாண்டும் தலைநகரின் பல பகுதிகளில் தீபாவளிச் சந்தைகள் நடைபெறும். அதேவேளையில், அதன் லைசென்ஸ் கட்டணத்திலும் சேவைக் கட்டணத்திலும் எந்தவித மாற்றமும் இருக்காது என அவர் சொன்னார்.

தாங்கள் பெற்ற புகாரை மைபிபிபி கட்சி மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவேளை அவர்கள் கூறுவது தனியார் தரப்பினர் மேற்கொள்ளும் தீபாவளிச் சந்தையாக இருக்கலாம் என்றார்.

தலைநகரைச் சுற்றியுள்ள பகுதியில் நடத்தப்படும் தீபாவளிச் சந்தைக்கான வாடகைக் கட்டணத்தை குறைப்பது குறித்து கோலாலம்பூர் மாநகர் மன்றம் பரிசீலனை செய்ய வேண்டும் என மைபிபிபி கட்சியின் தேசியத் தலைவர் டத்தோ லோகபால மோகன் முன்னதாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இவ்வாண்டு தலைநகரில் மேற்கொள்ள விருக்கும் தீபாவளிச் சந்தைக்கான வாடகைக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாக தாங்கள் வியாபாரிக ளிடமிருந்து புகார் பெற்றுள்ள தாக அவர் கூறியிருந்தார்.

தீபாவளிச் சந்தைக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் நாள் ஒன்றுக்கு 75 ரிங்கிட் வாடகை விதிக்கும் அதேவேளையில், அதன் காலகட்டத்தையும் இரண்டு வாரங்களாக் குறைத்துள்ளதாக தாம் வியாபாரிகளிடமிருந்து புகார் பெற்றுள்ளதாக கூட்டரசுப் பிரதேச முன்னாள் துணை அமைச்சருமான அவர் கூறியிருந்தார்.

இம்மாதம் 7ஆம் தேதி தொடங்கி 30ஆம் தேதி வரை தலைநகரில் தீபாவளிச் சந்தை நடைபெறும் என சிவமலர் கூறினார்.

அதேவேளையில், தீபாவளிக் கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 24 ரிங்கிட் லைசென்ஸ் கட்டணமும் சேவைக் கட்டணமாக 24 நாட்களுக்கு 120 ரிங்கிட் விதிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

இம்மாதம் 31ஆம் தேதி கொண்டாடப்பட விருக்கும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் தீபாவளி சந்தைகள் நடத்தப்படவுள்ளன.

இதனிடையே, தீபாவளியை முன்னிட்டு உணவுக் கூடைகளை வழங்க பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் 15 லட்சம் ரிங்கிட்டை மானியமாக அறிவிக்க வேண் டும் எனவும் டத்தோ லோகபால மோகன் கேட்டுக் கொண்டார்.